*ஜூன் 6, 2015*

**ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது**

இனிமையான குழந்தாய், இப்போது நீங்கள் எதிர்காலத்தில் தெய்வங்கள் ஆகிக்கொண்டிருக்கின்ற மனிதர்கள் என்பது உனக்கு தெரியும். நீ இங்கே அல்லது வேறு எங்கு அமர்ந்திருந்தாலும், நீ படிப்படியாக மனிதரிலிருந்து தெய்வமாக இடமாற்றம் செய்யப்படுகின்றாய். நீ என்ன செய்தாலும், சப்பாத்தி செய்யும்போது கூட, உன்னுடைய புத்தியில் தந்தையை வைத்திரு. நீ தந்தையை நினைவு செய்யும் போது, நீ ஆஸ்தியையும் 84பிறவிகளின் சக்கரத்தையும் நினைவு செய்கின்றாய். நாம் தெய்வங்கள் ஆகின்றோம் என்பதால், நம்மிடம் அசுர தன்மைகள் இருக்கக் கூடாது. யாருடனும் கோபம் கொள்ளவேண்டாம். யாருக்கும் துன்பம் கொடுக்க வேண்டாம். எந்த பயனில்லாத விஷயங்களையும் கேட்க வேண்டாம். வெறுமனே தந்தையை நினைவு செய்யுங்கள்.

இனிமையான பாபா, கர்மத்தை செய்யும்போது, நான் யோகத்தில் இருப்பேன். நான் ஒரு தெய்வம் ஆகப் போகின்றேன் என்பதை நான் நினைவு செய்வேன். நான் இன்று நடக்கும்போதும் காரியங்களை செய்யும்போதும் உங்களையும் ஆஸ்தியையும் நினைவு செய்வேன். நான் என்னுடைய விழிப்புணர்வில் என்னுடைய 84வாழ்க்கை சக்கரத்தையும் வைத்திருப்பேன். நான் குளிர்ச்சியாக இருந்து நான் சந்திக்கும் அனைவருக்கும் மகிழ்ச்சியை கொடுப்பேன்.

**சமார்த்தி அல்லது சக்தி**

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

**மனோ-விருத்தி அல்லது மனோபாவம்**

பாபா ஆத்மாவிற்கு: நீ மிக அதிர்ஷ்டசாலி ஆவாய், படகோட்டியே உன்னுடைய கைகளை பிடித்திருக்கின்றார். நீங்கள் தான் ஒவ்வொரு சக்கரத்திலும் அவரது கருவிகளாக ஆகின்றீர்கள்.

நான் ஒரு கருவியின் மனோபாவத்தை ஏற்றுக்கொள்வதில் உறுதியாக இருக்கிறேன். இனிமையான பாபா என்னுடைய கைகளை படித்து எனக்கு பாதுகாப்பு வழங்குவதோடு மட்டுமில்லாமல் அவர் எனக்கு அனைத்தையும் செய்துவிட்டு, எனக்கு புகழும் கொடுக்கின்றார். நான் என்னை ஒரு கருவியாக நினைத்து பாபாவின் பணியை செய்கின்றேன். பாபா என்னை தேர்ந்தெடுத்தற்காகவும் அவருடைய பணிக்கு என்னை ஒரு கருவி ஆக்கியதற்கும் நான் மிகவும் அதிர்ஷ்டசாலி என்று உணர்கின்றேன். இந்த எண்ணங்கள் எனக்கு ஒரு கருவியின் மனோபாவத்தை ஏற்றுகொள்வதை எளிதாக்குகின்றது.

**திருஷ்டி அல்லது தூய பார்வை**

பாபா ஆத்மாவிற்கு: யார் ஒருவர் யாரோ ஒருவருடைய எதிர்மறையான ஏதாவது ஒன்றை ஆக்கப்பூர்வமான ஒன்றாக மாற்றுகின்றார்களோ அவர்களே உலகை மாற்றக்கூடியவர்கள் ஆவார்கள்.

நான் ஆத்மாக்களை நோக்கி என்னுடைய திருஷ்டியை மாற்றிக்கொள்கின்றேன். என்னுடைய திருஷ்டி விவேகத்தினால் நிறைந்திருக்கின்றது. நான் சந்திக்கும் அனைவரிலும், எதிர்மறையானவற்றை ஆக்கப்பூர்வமான ஒன்றாக அது மாற்றிவிடுகின்றது. நான் யாருடைய குறையை பார்க்கும் போதும், அதை நான் வலிமையாக மாற்றுகின்றேன். நான் என்னுடைய திருஷ்டியில் ஒரு மாற்றத்தை கொண்டு வரும்போது நான் ஒரு உலகை மாற்ற கூடியவர் ஆகின்றேன்.

**ஓர் அலையை உருவாக்குதல்**

நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஓர் அழகான அலையை உருவாக்கும் மன்சா

சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.